# உடன் உதவும் பயில்வுச் செயலட்டை

## க.பொ.உயர்தரம் - தமிழ் - சங்கப்பாடல் - 04 - நேரம்:30 நிமிடம்

## விடைப்பத்திரம்

**தயாரிப்பு :திரு.எ.த.ஜெயரஞ்சித்**

BA. (Hons), M.A. (Tamil), Dip.in.Edu. (Merit Pass),Dip.in.Office Administration (First class),
Dip.in.Tamil(Colombo Tamil sangam),Dip.in.School Management(NIE)

**01. மேல்வரும் செய்யுளை வாசித்து அவற்றின்கீழ் உள்ள வினாக்களுக்கு விடை தருக.**

**(அ)** வாரலெஞ் சேரி தாரனின் றாரே
அலரா கின்றாற் பெரும காவிரிப்
பலராடு பெருந்துறை மருதொடு பிணித்த
ஏந்துகோட் டியானைச் சேந்தன் றந்தை
அரியலம் புகவினங் கோட்டு வேட்டை
நிரைய வொள்வா ளிளையர் பெருமகன்
அழிசி யார்க்கா டன்னவிவள்
பழிதீர் மாணலம் தொலைவன கண்டே.

**வினாத்தொகுதி:01**

**(i) இப்பாடல் இடம்பெறும் துறையை விளக்குக.**

* வாயில் நேர்ந்தது: கூற்று - 1: தோழி, தலைமகற்கு வாயில் மறுத்தது.பரத்தையிடம் சென்ற தலைவன், தலைவியிடம் வந்து கபாடம் (கதவு,கடை) திறக்கக் கேட்டல்.
* வாயில் மறுத்தது: கூற்று - 2: தோழி, தலைமகற்கு வாயில் நேர்ந்தது. தலைவன் - தோழி ஊடல் கொண்டு கடை திறக்க மறுத்தல்.

**(04 புள்ளிகள்)**

**(ii) இப்பாடலூடாக தோழி, தலைவனுக்கு உரைக்கும் செய்திகள் யாவை?**

* தலைவியின் குற்றமற்ற அழகு நலங்கள், தலைவனாகிய நீ பரத்தையிடத்து சென்றதால் இழந்தன.
* அழகுள்ள தலைவியை விட்டு நீ பிரிந்து, பரத்தையிடம் சென்றதால் 'என்ன நலம் கண்டாய்' என குறிப்பால் வினவுதல்.
* சேரிப் பக்கம் வருவதை விடுப்பாய்; உன் மாலையைத் தருவதையும் ஒழிப்பாய் என்று தலைவியின் ஊடலையும் புலப்படுத்தியமை.
* தலைவி ஊரவரின் பழி மொழிக்கு அஞ்சியதாக குறிப்பிடுகின்றாள்.

**(04 புள்ளிகள்)**

**(iii) இச் செய்யுளில் வெளிப்படும் பழந்தமிழ்கால இலக்கிய மரபுகளைக் குறிப்பிடுக.**

* மருத திணைக்குரிய ஊடல் ஒழுக்கம் கூறப்பட்டுள்ளது.
* தோழிக் கூற்றாக பெயர் சுட்டா மரபாக அமைந்தது.
* கருப் பொருட்களான மருத மரம், யானை, ஆர்காடு, நகரம், சேரி என்பன அமையப் பெற்றுள்ளன.
* அகத்திணைக்குரிய இப் பாடலில் சேந்தன், அழிசி ஆகிய இரு மன்னர்களின் வீரமும் பெயர் சுட்டி பாடப்பட்டுள்ளது.
* குறிஞ்சித் திணைக்குரிய கருப் பொருளாகிய யானை இம் மருதத் திணையில் குறிப்பிடப்பட்டு திணை மயக்கமாக அமைந்தது.
* குறிஞ்சி நிலத்து யானை மருத நிலத்து மருத மரத்தில் காட்டப்பட்டுள்ளது போல் தலைவன் தனக்குரிய தலைவியோடு வாழாமல் பரத்தையால் கவரப்பட்டு வாழ்ந்தான் என உள்ளுறை உவமை குறிப்பிடப்பட்டுள்ளது.

* மருத நிலத்திற்குரிய ஊடல் ஒழுக்கத்தின் நிமிர்த்தம் வருகின்ற அவர் தூற்றல், பரத்தை உறவு, வாயில் மறுத்தல், வாயில் நேர்தல் என்பனவும் இடம் பெற்றுள்ளன.
* விலங்கு வேட்டை, கள், இறைச்சி உணவு, யானை கடாவுதல், வாள்ப் போரிடல் எனும் சங்க கால பண்பாடுகளை வெளிப்படுத்துதல். **(யாதாயினும் நான்கு மட்டும்)**

**(04 புள்ளிகள்)**

**(12 புள்ளிகள்)**

<u>வினாத்தொகுதி:02</u>

**(i) இப்பாடலில் பின்வரும் தொடர்கள் எவ்வெப் பொருள்கயில் கையாளப்பட்டுள்ளதெனக் குறிப்பிடுக.**

- வாரல் - வர வேண்டாம்
- தாரல் - தர வேண்டாம்
- நிரிய ஒள் வாள் - பகைவருக்கு நரக வேதனைச் செய்யும் ஒளி படைத்த வாள்,
- தொலைதல் - கெடுதல்,அழிதல், குறைதல்

**(04 புள்ளிகள்)**

**(ii)இப்பாடலில் கையாளப்பட்டுள்ள உவமை அணிகளை எடுத்துக்காட்டுக.**

- அழிசி என்பவனின் ஆர்க்காடு நகரம் தலைவியின் குற்றமற்ற மாட்சிமையுடைய நலன்களுக்கு ஒப்பிடப்பட்டுள்ளது. உவமானம் - அழிசி என்பவனின் ஆர்க்காடு நகரம், உவமேயம் - தலைவி, பொதுத்தன்மை - பேரளவு சிறப்பு
- பகைவருக்கு நரகம் போன்ற ஒளிபொருந்திய வாள் சிறப்பிக்கப்பட்டது. உவமானம் - நரகம், உவமேயம் - ஒளிபொருந்திய வாள், பொதுத்தன்மை - துன்பம் தருதல்

**(04 புள்ளிகள்)**

**(iii) இப்பாடலில் காவிரி ஆற்றினதும் சோழநாட்டினதும் வளம் எடுத்துக்காட்டப்பட்டவாற்றைத் துலக்குக.**

- காவிரி ஆற்று நீர்த் துறையில் மக்கள் எப்போதும் நீராடுவர்
- ஆற்றோரத்தில் மருத மரங்கள் வளர்ந்து நிறைந்திருத்தல்
- அம் மரங்களில் யானைகள் கட்டப்பட்டிருத்தல்

**(04 புள்ளிகள்)**

**(12 புள்ளிகள்)**

<u>வினாத்தொகுதி:03</u>

**(i) இப்பாடலில் கவிஞர் கூற விளைந்த பேசுபொருளை விளக்குக.**

- பரத்தையிடம் சென்று வந்த தலைவன்மேல் தலைவி கொண்ட ஊடலை தோழி தலைவனுக்கு எடுத்துரைத்து தோழி தூதுக்கு உடன்படாதது.
- **தோழி கூற்றில் வாயில் மறுத்தது**: பரத்தையிடம் சென்ற தலைவன் தலைவியிடம் வந்து கதவு திறக்க கேட்டபோது தலைவனிடத்து ஊடல் கொண்டு (தலைவியும்,தோழியும்) கதவு திறக்க மறுத்ததாகும்.
- **தோழி கூற்றில் வாயில் நேர்ந்தது:** வராதீர் தார் தராதீர் எனினும் இவள் நலம் உமது பிரிவினால் துலைகின்றமையால் ஊரில் உள்ளோர் அவர் தூற்றுகின்றனர். எனவே தூது செல்ல உடன்படுகிறேன் என்பது வாயில் நேர்ந்ததாகும்.

**(04 புள்ளிகள்)**

**(ii) இப்பாடலில் பின்வரும் தொடர்கள் எவ்வெப் பொருள்கயில் கையாளப்பட்டுள்ளதெனக் குறிப்பிடுக.**

- சேரி - தெரு, வாழிடம்
- அலர் - பழிச்சொல்
- அரியல் - கள்
- நிரையம் - நரகம்

**(04 புள்ளிகள்)**

**(iii) இப்பாடலில் பரணரால் கையாளப்பட்ட உத்திகளை எடுத்து விளக்குக.**

* தலைவியின் கற்பு பழுதுபடாது நிற்கும் நிலையைக் கூறி தலைவனை நன்னெறியில் ஒழுகுமாறு தோழி பணித்தது வாயில் நேர்ந்த உத்தியாகும்.
* தலைவியின் அழகு நலன்கள் அழிதல் கண்ட பின்பாவவது எம் சேரிக்கு வருவதை நிறுத்திக் கொள்வாயாக உனது மாலையை தருவதையும் கைவிடுக உனது வருகையால் தலைவிக்கு பழி உண்டாகிறது என்பது வாயில் மறுத்த உத்தியாகும்.
* அழிசி என்பவனின் ஆர்க்காடு நகரம் தலைவியின் குற்றமற்ற மாட்சிமையுடைய நலன்களுக்கு ஒப்பிட்டு காட்டப்பட்டது.
* தலைவன் மாலையைத் தருவதால் பழிச்சொல் உண்டாகும் என்றும் பழிப்பிற்குரிய இழிந்த பரத்தையர் நலம் தோய்ந்த தலைவன் கற்பு பழுதுபடாது இருக்கும் தலைவியின் உடலை தொடாமல் நிற்கும் தலைவனின் இழி நிலையையும் தலைவியின் மாட்சிமையையும் புலப்படுத்த தோழி எனும் பாத்திரம் பயன்படுத்தப்பட்டது.

**(04 புள்ளிகள்)**

**(12 புள்ளிகள்)**

<u>வினாத்தொகுதி:04</u>

**(i) இப்பாடலில் இடம் பெறும் உள்ளுறை உவமத்தை எடுத்துக்காட்டுக.**

- மருதொடு பிணித்தஏந்துகோட் டியானை:குறிஞ்சி நிலத்திற்குரிய யானை மருத நிலத்தில் உள்ள மருத மரத்தில் கட்டப்பட்டுள்ளதைப் போல் தலைவன் தனக்குரிய மனைவியோடு வாழாமல் பரத்தையால் கவரப்பட்டு வாழ்ந்தான். என்பதைக் குறிக்கும்.

**(04 புள்ளிகள்)**

**(ii) அழிசி,சேந்தன் ஆகிய மன்னர்கள் பற்றி இப்பாடலில் குறிப்பிடப்பட்ட செய்திகளை எடுத்துக்காட்டுக.**

**அழிசி எனும் மன்னன் பற்றிய செய்திகள்**

* சேந்தனின் தந்தையாக விளங்குபவன்
* சோழருக்குரியவரான இவன் ஒரு பெரும் படைத் தலைவனாவான்.
* இவன் கள்ளை விரும்பி உண்பவன்
* விலங்கு கூட்டங்களை வேட்டையாடுபவன்
* இளம் வீரர்களின் தலைவன்
* பகைவரை அழிப்பதாகிய ஒளிபொருந்திய வாளினை உடையவன்
* இத்தகைய அவனது எழில் நிறைந்த நகராக ஆர்க்காடு நகர் விளங்குகிறது.

**சேந்தன் பற்றிய செய்திகள்**

* யானைகளைப் பிடிப்பதில் கை தேர்ந்தவன்.
* சோழர்களுக்காக காவிரிப் பெருந்துறை அருகே யானைகளை வசப்படுத்துபவன்.
* கொடைப் பொருநனாகிய கடியநெடு வேட்டுவன் போல ஒரு படைத் தலைவன்.

**(04 புள்ளிகள்)**

**(iii)இச்செய்யுள் புலப்படுத்தும் சங்ககால பண்பாடுகளை எடுத்துக்காட்டுக.**

* சங்கத் தமிழர்கள் விலங்குகளை வேட்டையாடுதல்
* இறைச்சியையும் கள்ளையும் உணவாக கொள்வர்
* வீரர்கள் யானைகளை வசப்படுத்தி பிடிப்பர்.
* பகைவருடன் வாள் போரிட்டு வெல்வர்

**(04 புள்ளிகள்)**

**(12 புள்ளிகள்)**

**வினாத்தொகுதி:05**

**(i)** பாடலில் கையாளப்பட்டுள்ள முதல்,கரு,உரிகளை எடுத்துக்காட்டுக.

- முதல்: மருத குறிஞ்சி நிலத்து மரபுகள் கூறப்பட்டுள்ளன.
- கரு: கருப் பொருட்களான மருத மரம், யானை, ஆர்காடு, நகரம், சேரி என்பன அமையப் பெற்றுள்ளன. குறிஞ்சித் திணைக்குரிய கருப் பொருளாகிய யானை இம் மருதத் திணையில் குறிப்பிடப்பட்டு திணை மயக்கமாக அமைந்தது.
- உரி: மருத திணைக்குரிய ஊடல் ஒழுக்கம் கூறப்பட்டுள்ளது. குறிஞ்சி நிலத்து யானை மருத நிலத்து மருத மரத்தில் காட்டப்பட்டுள்ளது போல் தலைவன் தனக்குரிய தலைவியோடு வாழாமல் பரத்தையால் கவரப்பட்டு வாழ்ந்தான்.மருத நிலத்திற்குரிய ஊடல் ஒழுக்கத்தின் நிமிர்த்தம் வருகின்ற அவர் தூற்றல், பரத்தை உறவு, வாயில் மறுத்தல், வாயில் நேர்தல் என்பனவும் இடம் பெற்றுள்ளன.

**(ii)** **பாடலில் கையாளப்பட்ட திணை மயக்கம் யாதெனக்குறிப்பிட்டு விளக்குக.**

- **திணை மயக்கம்:** ஒரு திணைக்குரிய கருப்பொருள் மற்றொரு திணையில் வருவதனை தொல்காப்பியம் 'திணை மயக்கம்' என்கிறது.
- இப்பாடலில் முதற்பொருளாக காவிரியாற்றை சார்ந்த மருத நிலமும் கருப்பொருளாக மருத மரமும் உரிப்பொருளாக ஊடலும் குறிப்பிடப்பட்டுள்ளதால் இப்பாடல் மருதத்திணையை சார்ந்தது என்பது தெளிவு.
- எனினும் இப்பாடலில் குறிஞ்சி திணைக்குரிய கருப்பொருளாகிய யானை குறிப்பிடப்பட்டுள்ளது. இம்மயக்கம் இப்பாடலின் உள்ளுறை உவமத்தை புரிந்து கொள்வதற்கு உதவும்.
- ஊள்ளுறை உவமைக்குறிப்பு: தலைவன் தனக்குரிய மனைவியோடு வாழாமல் பரத்தையால் கவரப்பட்டு வாழ்ந்தான்.
- இக்கருத்து, தமிழறிஞர்கள் எழுதிய உரைநூல்கள் எவற்றிலும் காணப்படவில்லை. ஆனால், இது ஆங்கிலேயத் தமிழறிஞர் ராபர்ட் பட்லர் என்பவரால், அவருடைய குறுந்தொகையின் ஆங்கில மொழிபெயர்ப்பு நூலில் கூறப்பட்டுள்ளது. இது தமிழ் இலக்கணத்திலும், சங்க இலக்கிய அகத்திணை நூல்களிலும் அவருடைய புலமைக்கு ஒரு எடுத்துக்காட்டாகும்.

**(04 புள்ளிகள்)**

**(iii) "காவிரிப் பலராடு பெருந்துறை" ,"மருதொடு பிணித்த ஏந்துகோட்டி யானை "எனும் தொடர்கள் புலப்படுத்தும் உட்கருத்துக்களை இனங்கண்டு விளக்குக.**

- **காவிரிப் பலராடு பெருந்துறை**: காவிரி ஆற்று நீர்த் துறையாகிய பரத்தையிடக்து ஆண்களாகிய மக்கள் எப்போதும் நீராடும் உறவுகொண்டவர்களாகவே இருக்கும் பரத்தையின் இழிவை இத்தொடரால் சுட்டிக்காடடியுள்ளார்.
- **மருதொடு பிணித்த ஏந்துகோட்டி யானை**: வளர்ந்துசெளித்து நிறைந்திருந்த குளிர்ந்த மருத மரங்களாகிய
 பரத்தையரிடத்து உயர்ந்து வளர்ந்த தந்தங்களையுடைய யானைகளாகிய தலைவன் பரத்தை உறவால் கட்டப்பட்டிருக்கின்றான் என்பதைப் புலப்படுத்தியுள்ளார்.

**(04 புள்ளிகள்)**

**(12 புள்ளிகள்)**